பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# குன்னுவர் வாழ்வியலில் வெறியாட்டு

**திருமதி அ. ரூபாதேவி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி. மின்னஞ்சல்:
rubadevi.a@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டுப்புற சமவெளிப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கையிலிருந்து மலையின மக்களின் வாழ்க்கை பெரிதும் வேறுபட்டுள்ளது. இம்மலை வாழ் மக்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள அவர்களின் பழக்க வழக்கங்கள், தொழில்கள், நம்பிக்கைகள், வழிபாட்டுமுறைகள், திருவிழா, சடங்கு முறைகளைக் காணவேண்டும். இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட குழு அல்லது கூட்டத்தைப் பற்றி ஆராய்வது இனவரைவியல். இதனடிப்படையில் குன்னுவர் இனமக்களின் வாழ்வியலில் காணப்படும் வழிபாட்டுச் சடங்குகளில் ஒன்றாக வெறியாட்டைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது. சங்ககால மக்கள் வெறியாட்டை வீட்டு விழாவாகக் கொண்டாடி வந்திருக்கின்றனர். பின்னர் சமுதாய விழாவாக மாற்றம் பெற்றிருக்கிறது. தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் மிகப் பழைமையானது வெறியாட்டு. மனிதர் மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்கிற நம்பிக்கையில் உருவானதே வெறியாட்டு எனலாம். கூத்து வகைகளுள் ஒன்றாக அமைவனவற்றுள் சிறப்புப் பெறுவது வெறியாட்டு. பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வெறியாட்டு நிகழ்வு கொடைக்கானல் மலைவாழ் மக்களான குன்னுவர் வாழும் பகுதிகளில் இன்றைய காலத்திலும் காணப்படுகிறது. சில பொருட்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் வெறியாட்டு நிகழ்வுகள் மரபு மாறாமல் இன்றும் தொடர்கிறது என்பதை குன்னுவர் வாழ்வியலால் அறியமுடிகின்றது.

**திறவு சொற்கள்**

மருள்காய், வெண்பொரி, மறி பலியிடுதல், சேவல் கொடி.

## முன்னுரை

பழனி மலைத் தொடர் என அழைக்கப்படும் கொடைக்கானல் மலைப்பகுதியில் பழங்குடி மக்களான பளியர், புலையர், குன்னுவர் ஆகிய மலையின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நாட்டுப்புறச் சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கையிலிருந்து மலையின மக்களின் வாழ்க்கை பெரிதும் வேறுபட்டுள்ளது. இம்மலை வாழ் மக்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள அவர்களின் பழக்கவழக்கங்கள், தொழில்கள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், திருவிழா, சடங்கு முறைகளைக் காணவேண்டும். இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட குழு அல்லது கூட்டத்தைப் பற்றி ஆராய்வது இனவரைவியல். மேலும் ஒரு இனக்குழு அல்லது கூட்டத்தைப் பற்றி அறிந்து ஆராய்வதைக் காட்டிலும் அவர்களின் வாழ்க்கையை உணர்ந்து அனுபவித்து எழுதுவதே இனவரைவியல் என பேரா.செல்ல பெருமாள் குறிப்பிடுகிறார். இதன் அடிப்படையில் குன்னுவர் இன மக்களின் வாழ்வியலில் காணப்படும் வழிபாட்டுச் சடங்குகளில் ஒன்றான வெறியாட்டைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## குன்னுவர் வாழும் பகுதிகள்

*“குன்னுவர்கள் ‘பாலனி மலைகளில் உள்ள பிரதான விவசாய சாதியினர்’ என்று விவரிக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களை குன்னுவ வெள்ளாளர்கள் என்று அழைத்துக்கொள்கிறாள்கள். மேலும் குன்னுவ என்ற பெயர் கோயம்புத்தூரில் உள்ள குன்னூர் கிராமத்திலிருந்து பெறப்பட்டது என்றும் கூறுகிறார்கள்.”*[1] தமிழ்நாட்டில் கொடைக்கானல் மலைப்பகுதி கிராமங்களான தாண்டிக்குடி, பட்லாங்காடு, ஆடலூர், கொடலங்காடு, சோலைக்காடு, அகமலை, தோணிமலை, பன்றிமலை, மங்களம் கொம்பு, பெரியூர்,

பாச்சலூர், மூலையூர், வடகவுஞ்சி, வில்பட்டி, மேல்பள்ளம், பெரும்பள்ளம், அசன்கொடை, பேத்துப்பாறை, பள்ளங்கி பூம்பாறை, பூண்டி, மன்னவனூர், கிளாவரை, அடுக்கம், வெள்ளகெவி, கின்னூர், கண்ணனூர், கூக்கால், பழம்புத்தூர், கவுஞ்சி போன்ற பகுதிகளில் குன்னுவர் இன மக்கள் வாழ்கின்றனர். கேரளா மாநிலத்தில் தேவிகுளம் தாலுகாவில் வட்டவடை, கோயிலூர், கொட்ட கொம்பூர் கிராமங்களில் வாழ்கின்றனர்.



வெறியாட்டு

வெறி10ஆட்டு ஸ்ரீ வெறியாட்டு, வெறி – மணம். ஒழுங்கு வெறி என்பது ஆவேசம் கொண்டு ஆடுதல் என்றும் ஆட்டு என்பது ஆடுதல் கூத்து என்றும் தனித்தனியாகப் பொருள் கொள்ளப்படுகின்றன. வெறியாட்டு என்ற சொல் தெய்வமேறப் பெற்று ஆடுதல் என்பதையே குறித்து நிற்கிறது.

*“கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்*
*ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்”*[2]

என வெறியாட்டு குறித்துத் தொல்காப்பியம் கூறும் இலக்கண வரையறையினை அடியொற்றியே வெறியாட்டு குறித்த கருத்துக்களும் நிகழ்வுகளும் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

*“சங்ககால மக்கள் வெறியாட்டை வீட்டு விழாவாகக் கொண்டாடி வந்திருக்கின்றனர். பின்னர் சமுதாய விழாவாக மாற்றம் பெற்றிருக்கிறது. தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் மிகப் பழைமையானது வெறியாட்டு. மனிதர் மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்கிற நம்பிக்கையில் உருவானதே இது எனக் கருதலாம். ஆவேசமாக ஆடி குறி சொல்லும் பழக்கம் தொன்றுதொட்டு தொடர்ந்து வந்த நிகழ்வாகவும் உள்ளது.”*[3] கூத்து வகைகளுள் ஒன்றாக அமைவனவற்றுள் சிறப்புப் பெறுவது வெறியாட்டு. பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வெறியாட்டு நிகழ்வு கொடைக்கானல் மலைவாழ் மக்களான குன்னுவர் வாழும் பகுதிகளில் இன்றைய காலத்திலும் காணப்படுகிறது.

வெறியாட்டானது மலையின மக்களின் தலைவன் சாமியாட்டம் ஆடக்கூடிய தேராடியார், ஊர் பெரியோர் ஆகியோருக்குச் செய்யும் மரியாதை நிகழ்வுகளோடு, பளியர் இசை மேளத்தோடு ஆரம்பமாகிறது. முதலில் வெறியாட்டுக்கு உரிய ராகத்தை வாசிப்பர். பாடல் இருக்காது. ராசத்தை தாளம் என இம்மக்கள் குறிப்பிடுவர். மானாட்டு, வட்டாட்டு, குரங்காட்டு, நாத்து நடவாட்டு, மாட்டு ஆட்டு, இறுதியாக சாமியாட்டு (வெறியாட்டு) நடைபெறும். இந்நிகழ்வினை வெறியாட்டு என மாறன் என்ற குன்னூர் இனத்தவர் கூறுகின்றனர்.



பனிரெண்டாண்டுகளுக்கு ஒருமுறையும் அல்லது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையும் மக்கள் தங்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப வெறியாட்டை நிகழ்த்துகின்றனர். வெறியாட்டு நிகழும் இடத்தை மந்தை எனக் குறிப்பிடுகின்றனர். மந்தையைச் சுத்தப்படுத்திப் பின்னர் பயன்படுத்துவர். வெறியாட்டு முடிந்த பின்னரும் அவ்விடத்தை மரியாதையோடு பாதுகாத்து வருகின்றனர். அவ்விடத்தில் செருப்பு அணிந்து செல்வதில்லை. சாமியாட்டம் நடைபெறும் இடங்கள், தேவராடியார் வீடு, மந்தை, மலைப்பகுதிகளில் தனியான இடங்கள் ஆகும். இன்றைய காலங்களிலும் இதைப் பாதுகாத்து வருகின்றனர். இவ்வெறியாட்டு பங்குனி மாதம் நடைபெறுகிறது என சின்ன குன்னுவர் கூறுகின்றனர்.

திருவிழாவிற்குத் தயாரிப்பாக முதலில் ஊர்க்கூட்டம் நடைபெறும். திருவிழா எவ்வாறு

நடத்துவது என்பது பற்றி ஆலோசிக்கப்படும். வரித்தொகை, எத்தனை நாட்கள் திருவிழா நடத்துவது, பாதுகாப்பு முறைகள், மக்கள் எவ்வாறு பங்கெடுத்துக் கொள்வது, சாமியாட்டத்திற்கான பொருட்களைத் தயாரிப்பது மற்றும் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான கருத்துக்கள் ஆலோசிக்கப்படுகின்றன. திருவிழா நடத்துவதை உறுதிபடுத்திவிட்டு எத்தனை நாட்கள் சாட்டுவது என்று தெரிவிக்கப்படுகிறது. சாமி சாட்டு நாட்களை இம்மக்கள் 'வரச்சல்' என அழைக்கின்றனர். வெறியாட்டுக் களத்தை சுத்தப்படுத்தி சாணம் தெளித்து வேப்பிலை பச்சப்பூ மாலை தோரணம் கட்டுகின்றனர். சாமியாட்டம் நடைபெறும் முதல்நாள் தொடங்கி முடிவுறும் வரை பளியர் குழல் ஊதி மேளம் இசைத்துக் கொண்டே இருப்பர். சாமியாடும் களத்தில் புழங்கு பொருட்களாக அரைத்த மஞ்சள் கலக்கிய மஞ்சள் நீர், குடத்தில் தண்ணீர், அருகம்புல், பச்சப்பூ, மருள்காய், வாழை இலை, சாம்பிராணி, வாழைப்பட்டை, பத்தி, எலுமிச்சைப் பழம், திருமண், கூடை, அரிவாள் போன்றவை இருக்கும். தேராடியார், சட்டன், அருளாடிகள், பெரியோர், பொதுமக்கள் அனைவரும் களத்தில் இருந்து தெய்வத்தை வேண்டுவர் பளியர் சாமி அழைக்கும் தாளத்தை தொடர்ந்து இசைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அச்சம் தரும் வகையில் ஆவேசத்துடன் சாமி வந்து ஆடுவர். மருள்காய் வாங்கி தன் கை, கால், மெய் போன்ற பகுதிகளில் ஆவேசத்துடன் அடித்துக் கொண்டே ஆடுவர். மருள் காயை தூக்கியெறிந்து விட்டு என்னை எதற்காக அழைத்தீர்கள் என்று சாமி வந்தவர் கேட்பார். மக்கள் தங்களின் சூழலை மழையின்மை, நோய், வறுமை, ஆடுமாடு நோய் வந்து இறப்பது, வெள்ளாமை செழித்தல், மலைகளில் விலங்குகளிடமிருந்து பாதுகாத்து தங்களைக் காக்க வேண்டுதல் எனப் பலவற்றைக் கூறுவர். உன்னை நம்பித்தான் மலையில் வாழ்கிறோம் எனத் தெய்வத்திடம் உரிமையோடு பேசுவர். சரி, நான் பார்த்துக் கொள்கிறேன் எனத் தெய்வம் கூறும். மேலும் தாளத்தை மாற்றி இசைப்பர். பல்வேறு தெய்வங்கள் வரும் தாளத்திற்கேற்ப, இசைக்கேற்ப அருளாடிகள் அனைவரும் ஆடுவர். அக்களம் ஒரு வெறிக்களம் போன்று இருக்கும். ஆரவாரத்துடனும் ஆவேசத்துடனும் அச்சம் தரும் வகையில் காணப்படும்.

சாமியாட்டம் ஆடுகின்ற தேராடியாரிடம் காலில் விழுந்து தங்களின் குறைகளைக் கூறி மஞ்சள், திருநீறு வாங்கிச் செல்கின்றனர். குறைகள் ஏதுமிருப்பின் சாமியாடுவோர் மஞ்சள் நீரை முகத்தில் தெளித்துச் சில சடங்குகள் செய்வர். சாமியாடுபவர் மந்திரம் கூறி எலுமிச்சைப் பழத்தினை நான்காக வெட்டி திசைக்கு ஒரு பக்கம் வீசுவார். அதே போன்று திருநீற்றையும் வீசுவார். மேலும் மருள்காயை இரண்டாகப் பிளந்து, ஒரு பெண் கழுத்தில் மருள்காயை மாலையாகப் போட்டு மந்திரங்களைக் கூறி அரிவாளால் மருள்காயை இரண்டாக அறுப்பர். சிறுதுண்டாக நறுக்கி தலையைச் சுற்றி எதிரெதிராக வீசுவிடுவர். மஞ்சள் நீரை முகத்தில் தெளிப்பர். பின்னர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை கூறுவர். வெறியாட்ட நிகழ்வு முடிந்தபின் தேரடியாரின் வீட்டில் மறுதெய்வம் கேட்பர். அப்பொழுது அவர் எப்படி இருப்பது என்று உத்தரவிடுவார். இதுபோல ஒவ்வொருவருக்கும் தங்களின் வாழ்வில் நடைபெறும் சூழ்நிலைகளைக் கூறி நிவர்த்தி செய்வதைக் கேட்டுக் கொள்கின்றனர். இதனால் தங்களின் பிரச்சனைகள் தீர்ந்துவிடுவதாக நம்புகின்றனர். நிகழ்வுக்குப் பின்னர் பாரம்பரிய நடனமான குன்னுவராட்டம் நடைபெறும். இந்நிகழ்வினை வெறியாட்டு என அழைக்கின்றனர்.

மேலே கண்ட சாமியாட்டம் நிகழ்ந்த பொழுது அம்மகளில் ஒரு சிலர் சாமியாடுவது முருகன்தான் என நினைத்து காவடி எடுத்து ஆடிவந்தனராம். இவர்களை சாமியாடிக் கொண்டிருந்தவர் மருள்காயால் விரட்டி அடித்தார் என களச் செய்தியாகக் கூறுகின்றனர் இம்மக்கள்.

இச்செய்தியிலிருந்து மலைவாழ் மக்கள் முருகன் மட்டுமில்லாமல் பிற தெய்வங்களையும் வணங்குகின்றனர் என அறியமுடிகிறது. முருகனை இம்மக்கள் குன்றுநாதன் என அழைக்கின்றனர். முருகனுக்கு மட்டும் இல்லாமல் பிற வன தெய்வங்களுக்கும் வெறியாட்டு நிகழ்த்தப்படுகிறது என்பதை குன்னுவர் இன மக்களிடமிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

**வெறியாட்டு அன்றும் இன்றும்**

| | அன்று | - | இன்று |
|---|---|---|---|
| 1. | சேவல் கொடி | - | சேவல் பறக்கவிடுதல் |
| 2. | முதுவாய் வேலன் | - | தேராடி |
| 3. | மறிபலியிடுதல் | - | ஆடு பலியிடுதல் |
| 4. | தினை | - | அரிசி |
| 5. | களம் மண் தூவுதல் | - | புதிய களம் அமைத்தல், மண்தூவுதல் |
| 6. | இசை | - | மேளதாளம் வாசித்தல் |
| 7. | காலம் நள்ளிரவு | - | இரவு நேரத்திலிருந்து |
| 8. | நறும்புகை | - | சாம்பிராணி புகையேற்றுதல் |
| 9. | நெல்லும் வெண்பொரியும் பூக்களும் | - | நெல், பூக்கள் |
| 10. | பச்சிலைக் கொடி | - | மருள்காய் |
| 11. | சிவப்பு நிற ஆடை | - | வெள்ளை, காவி, வெள்ளையில் மஞ்சள் |

தெளித்தது.

மேலே குறிப்பிட்ட அட்டவணையில் ஒரு சில பொருட்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் வெறியாட்டு நிகழ்வுகள் மரபு மாறாமல் இன்றும் தொடர்கிறது என்பதை குன்னுவர் வாழ்வியலால் அறியமுடிகிறது.

**தொகுப்புரை**

- சமவெளிப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையிலிருந்து மலையின மக்களின் வாழ்க்கை பெரிதும் வேறுபட்டது.
- கொடைக்கானல் மலைப்பகுதி கிராமங்களிலும் கேரளா மாநில கிராமங்களிலும் குன்னுவர் வாழ்கின்றனர்.
- தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் மிகப் பழைமையானது வெறியாட்டு.
- பனிரெண்டாண்டுக்கு ஒரு முறையோ அல்லது மூன்றாண்டுக்கு ஒரு முறையோ வெறியாட்டை நிகழ்த்துகின்றனர்.
- வெறியாட்டு நிகழும் மந்தைப் பகுதியை பாதுகாத்து வருகின்றனர்.
- வெறியாட்டு பங்குனி மாதம் நடைபெறுகிறது.
- பாரம்பரிய முறைப்படி விழா நடைபெறுகிறது.
- மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க குறி சொல்லப்படுகிறது.
- சிறுசிறு மாற்றங்கள் இருந்தாலும் வெறியாட்டு நிகழ்வு மரபு மாறாமல் இன்றும் தொடர்கிறது.

**அடிக்குறிப்புகள்**

1. Edgar Thurston, Castes and Tribes of Southern, Pg.11
2. மணவாளன்.அ.அ.,(உ.ஆ), தொல்காப்பியப் பொருளதிகாரம்: அகததிணை இயல்-புறத்திணை இயல், நூற்பா.24
3. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.67

**துணைநூற்பட்டியல்**


1. சக்திவேல், சு., பழங்குடிகள், நியூ சென்சுரி புத்தக நிலையம், சென்னை, 1974.
2. தமிழ் ஒளி, தமிழ்நாட்டுப் பழங்குடிகள்(மானிடவியல் நோக்கில்), யாவரும் பதிப்பகம், சென்னை, 2025.
3. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2013.
4. மணவாளன்.அ.அ.,(உ.ஆ), தொல்காப்பியப் பொருளதிகாரம்: அகததிணை இயல்-புறத்திணை இயல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
5. ராஜேந்திரன், ம., மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள், அடையாளம் பதிப்பகம். திருச்சி, 2013.
6. Edgar Thurston, Castes and Tribes of Southern, Government Press, Madras, 1909.

**களஆய்வு-- தகவலாளிகள்**

1. மாறன் (தகவலாளிகள்), தாண்டிக்குடி, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதி.
2. சின்ன குன்னுவர், தாண்டிக்குடி, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதி.

*****